**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**



# ஈரான் கைதிக்கு அமைதிக்கான நோபல்

**ஓஸ்லோ, அக். 6:** ஈரானில் பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராகவும், ஜனநாயகத்தை வலியுறுத்தியும் போராடி வரும் மனித உரிமை ஆர்வலர் நர்கீஸ் முகமதிக்கு (51) நடப்பாண்டு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானில் பலமுறை கைது நடவடிக்கையை எதிர்கொண்டு, பல ஆண்டுகளாக சிறைவாசம் அனுபவித்து வரும் நிலையிலும் அயராது பணியாற்றி வருவதற்காக, நர்கீஸ் முகமதிக்கு இந்தக் கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது.

நார்வேயின் ஓஸ்லோ நகரில், நார்வே நோபல் கமிட்டி தலைவர் பெரிட் ரெய்ஸ் ஆண்டர்சன் அமைதிக்கான நோபல் பரிசு அறிவிப்பை வெள்ளிக்கிழமை வெளியிட்டார்.

அப்போது, 'ஈரானில் நர்கீஸ் முகமதி தலைமையில் மிக முக்கிய செயல்பாட்டை மேற்கொள்ளும் ஒட்டுமொத்த இயக்கத்துக்கும் முதன்மையான அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது' என்று ஆண்டர்சன் குறிப்பிட்டார்.

**13 முறை சிறை, 31 ஆண்டுகள் தண்டனை:** 'கருத்துரிமை மற்றும் சுதந்திர உரிமைக்கான தனது துணிவுமிக்க போராட்டத்தால், நர்கீஸ் முகமதி தனிப்பட்ட முறையில் எதிர்கொண்ட பாதிப்புகள் ஏராளம். இது வரை 13 முறை சிறையில் அடைக்கப்பட்டுள்ள அவர், 5 முறை குற்றம் உறுதி செய்யப்பட்டு, மொத்தம் 31 ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் 134 கசையடி விதிக்கப்பட்டவர்' என்று நோபல் கமிட்டி தெரிவித்துள்ளது.



நோபல் பரிசு வழங்கும் நிகழ்ச்சி, ஸ்வீடனின் ஸ்டாக்ஹோமில் டிசம்பர் 10–ஆம் தேதி நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில் பங்கேற்கும் வகையில், அவரை விடுவிக்க வேண்டும் என்று ஈரானுக்கு நோபல் கமிட்டி கோரிக்கை விடுத்துள்ளது.

## பெண் உரிமை ஆர்வலர்



நர்கீஸ் முகமதி

**தெஹ்ரான் சிறையில்...:** ஈரானில் அரசு விதிமுறைகளுக்கு ஏற்ப ஹிஜாப் அணியாத குற்றச்சாட்டில் கைதான மாஷா அமினி என்ற இளம்பெண், போலீஸ் காவலில் கடந்த ஆண்டு உயிரிழந்தார். இந்தச் சம்பவத்தைக் கண்டித்து, ஈரான் முழுவதும் பெரிய அளவில் வன்முறைப் போராட்டங்கள் நடைபெற்றன.

இது தொடர்பான குற்றச்சாட்டில் தற்போது நர்கீஸ் சிறையில் இருந்து வருகிறார். ஈரானில் மேற்கத்திய நாடுகளுடன் தொடர்பு உள்ளதாக கைதானவர்கள் மற்றும் அரசியல் கைதிகள் அடைக்கப்பட்டிருக்கும் தெஹ்ரானின் எவின் சிறையில் இவர் அடைக்கப்பட்டுள்ளார். பொறியாளரான நர்கீஸ், ஐரோப்பிய நாடாளுமன்றத்தால் வழங்கப்படும் கருத்துரிமைக்கான 'சகரோவ்' பரிசை கடந்த 2018–இல் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஈரான் செய்தி நிறுவனம் கருத்து:** ஈரான் அரசுடன் தொடர்புடைய 'ஃபார்ஸ் நியூஸ்' செய்தி நிறுவனம், நர்கீஸ் முகமதிக்கான கௌரவத்தை நிராகரித்துள்ளது. நாட்டில் தொடர்ந்து பதற்றத்தையும் குழப்பத்தையும் விளைவிக்கும் நபர் என்று அவரை விமர்சித்துள்ளது.

அமைதிக்கான நோபல் பரிசு, தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழுடன் ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் ரூ.8 கோடி) பரிசுத் தொகையை கொண்டதாகும்.

## 19–ஆவது பெண்

அமைதிக்கான நோபல் பரிசு பெறும் 19–ஆவது பெண் நர்கீஸ் முகமதி ஆவார். இதே போல், நோபல் வெல்லும் ஈரான் நாட்டைச் சேர்ந்த 2–ஆவது பெண்ணும் ஆவார். கடந்த 2003–இல் ஈரானைச் சேர்ந்த மனித உரிமைகள் ஆர்வலர் ஷிரின் எபாடி அமைதிக்கான நோபல் பரிசை வென்றிருந்தார்.

122 ஆண்டுகால நோபல் வரலாற்றில் சிறையில் உள்ள ஒருவருக்கு அமைதிக்கான பரிசு அளிக்கப்படுவது இது 5–ஆவது முறையாகும்.

இதர துறைகளுக்கான நோபல் பரிசு பெறுவோரின் பெயர்கள், ஸ்வீடனின் ஸ்டாக்ஹோமில் அறிவிக்கப்படுகிறது. ஆனால், அமைதிக்கான நோபல் பரிசு பெறும் நபரை மட்டும் நார்வே நாடாளுமன்றத்தால் நியமிக்கப்படும் 5 உறுப்பினர்கள் கொண்ட சுதந்திரமான குழு தேர்வு செய்கிறது.

மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம் ஆகிய துறைகளுக்கான நோபல் பரிசுகள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட நிலையில், பொருளாதாரத்துக்கான நோபல் திங்கள்கிழமை (அக். 9) அறிவிக்கப்படவுள்ளது.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# விண்வெளியில் வேலைவாய்ப்பு!

செயற்கைக்கோள்களின் தகவல்தொடர்பு பின்னலில் பூமி நம் உள்ளங்கைப் பந்தாகி விட்டது. தற்போது மொத்தம் 7,702 செயற்கைக்கோள்கள் பூமியைச்சுற்றி வருகின்றன. அவற்றின் பயன்பாடுகள் தகவல் தொடர்பு (3135), புவி கண்காணிப்பு (1052), தொழில்நுட்ப வளர்ச்சி (383), பயண வழிகாட்டுதல் (154), விண்வெளி அறிவியல் (108) - என்றவாறு கடந்த 66 ஆண்டுகளாக மனித குலத்திற்கு உதவி வருகின்றன.

அமெரிக்கா (2926), சீனா (493), ஐக்கிய குடியரசு (450), ரஷியா (167), ஜப்பான் (90), ஐரோப்பா (62), இந்தியா (58), கனடா (52), ஜெர்மனி (44), பன்னாட்டுச் செயற்கைக்கோள்கள் (61) என்றவாறு இந்த நாடுகள் நீண்ட காலமாக விண்வெளியின் ஒரு பகுதியாக இருந்து வருகின்றன. இவை பல வணிக செயற்கைக்கோள் நிறுவனங்களின் தாயகமாக இருப்பதால் இது குறித்து வியப்படையத் தேவையில்லை.

ஆனால், 21-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், வெறும் 14 நாடுகள் மட்டுமே செயற்கைக்கோள்களை இயக்கி வந்தன. கடந்த இருபது ஆண்டுகளில் மட்டும் 91 புதிய விண்வெளிப் பயண நாடுகளின் செயற்கைக்கோள்கள் பூமியைச் சுற்றி வருகின்றன.

இந்தப் பயணம், 1957 அக்டோபர் 4-இல் உலகின் முதல் செயற்கைக்கோளான ஸ்புட்னிக்-1-ஐ ரஷியா செலுத்தியது முதல் தொடங்கியது. 1967 அக்டோபர் 10 அன்று 'புற விண்வெளி அமைதி உடன்படிக்கை' செய்யப்பட்டு, உலக நாடுகளிடையே ஒப்பந்தம் கையொப்பம் ஆனது.

அதனால்தான் அக்டோபர் 4 முதல் 10 வரையிலான ஒரு வாரம் 'உலக விண்வெளி வாரமாக' கொண்டாடப்படும் என்று 1999-ஆம் ஆண்டு ஐ.நா. சபை அதிகாரபூர்வமாக அறிவித்தது.

வளர்ந்து வரும் விண்வெளித் துறையின் வணிக முக்கியத்துவத்தையும், தொழில்முனைவோருக்கான அதிகரித்துவரும் வாய்ப்புகளையும், நன்மைகளையும் முன்னிலைப்படுத்தும் வகையில் 'உலக விண்வெளி வாரக் கருக்கொள்' அறிவித்துள்ள இந்த ஆண்டுக்கான கருப்பொருள், 'விண்வெளியும் தொழில் முனைவோரும்' என்பதாகும்.

உலக நாடுகள் செயற்கைக்கோள்களைக் குறைந்த எடையில் திறம்பிக்கதாகக் குறும்படிவத்தில் உலக நாடுகளும் தயாரிக்கத் தொடங்கிவிட்டன. அவற்றுள் 10-100 கிலோ நுண் செயற்கைக்கோள், 1-10 கிலோ 'நானோ' செயற்கைக்கோள், 1 கிலோவிற்கும் குறைவான 'பிக்கோ' செயற்கைக்கோள் போன்று தயாரிப்பதால், விண்வெளிச் செலவுகள் குறைந்து வருகின்றன.

கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட நவீன தொழில்நுட்ப வளர்ச்சிகளால் ஏவுகணைகளைச் செலுத்துவதற்கான செலவும் குறைகிறது. அமெரிக்காவில் 'ஸ்பேஸ் எக்ஸ்' போன்ற நிறுவனங்கள் மீள் பயன்பாட்டுக்குரிய ராக்கெட்டுகளை உருவாக்குகின்றன. அதனால் ஒருமுறை பயன்படுத்திய பிறகு 3 கோடி டாலர் செலவில் தயாரித்த உபகரணங்கள் தூக்கியெறிந்து வீணாவது இல்லை.

'ஸ்பேஸ் எக்ஸ்' சமீபத்தில் 13-ஆவது முறையாக அதே முதல் நிலை உந்துதல கலத்திக் கட்டத்திலை மீண்டும் பயன்படுத்தியது ஒரு சாதனை தான். மறைமுகமாக இது மிகப்பெரும் பொருளாதாரச் சிக்கனத்தையும் ஏற்படுத்துகிறது. உள்ளபடியே ஆற்றல் செயற்கைக்கோள் ஏவும் திட்டங்களில் மீள் பயன்பாட்டு ஏவுகலன்கள் வர்த்தக ரீதியில் லாபகரமானவை.



நெல்லை சு. முத்து

புவி சுற்றிவரும் விண்வெளி நிலையங்களில் வளரும் தாவரங்களும், பயிர்களும் வேளாண்மையில் புதுமைகள் விளைவிக்கலாம். புவி சுற்றுப்பாதையில் நிறைவீர்ப்பு குறைந்த விண்வெளியில் பொருட்கள் உற்பத்தி சில அதிசயங்களை நிகழ்த்தலாம்.

வணிகப் பயன்பாட்டுக்கு உரிய தொலைநிலை உணர்வு, தகவல் தொடர்புச் செயற்கைக்கோள்கள் பொருளாதாரம் பெருக்க வல்லவை.

1970-களில் இருந்து செயற்கைக்கோள் தொலைக்காட்சியுடன் வணிகத் தளத்தின் வடிவங்கள் பல ஆண்டுகளாக இருந்து வந்தாலும், விண்வெளியானது அரசின் களமாகவே கருதப்பட்டது. தென் கொரியா போன்ற நாடுகள் பல்கலைக்கழகங்கள் வழி போறிய பயிற்சி பெற்று விண்வெளித் தொழில்நுட்பத் திறனையை மேம்படுத்தி சொந்தமாக விண்வெளி வாணிபத்தில் ஈடுபட விழைகின்றன.

**விண்வெளி சுற்றுலா ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் ஒவ்வொரு சுற்றுலாப் பயணிக்கும் சந்திரனுக்குச் செல்வதற்கான செலவை அறிவித்துள்ளன. நிலவிற்கு அருகில் அதன் சுற்றுப்பாதையில் வட்டமடித்துத் திரும்புவதற்கு ஒருவருக்கு 15 கோடி டாலர். இக்கட்டணம் பல மாத விண்வெளிப் பயிற்சியை உள்ளடக்கியது.**

இது தவிர்வும், மனிதர்களை விண்வெளிச் சுற்றுலா அழைத்துச் செல்வது வாடிக்கையாகவும் வர வாய்ப்பு உள்ளது. தொடக்கத்தில் இதற்கான கட்டணம் பயணியின் உடல் எடைக்கும், உணவுப் பழக்கத்திற்கும் ஏற்ப வேறுபடும்.

1960-களில் விண்வெளிப் பந்தயம் தொடங்கியது. தாழ்புவி சுற்றுப்பாதைக்கு ஒரு கிலோ உணவுப் பண்டம் எடுத்துச் செல்ல ஒரு லட்சம் டாலர் (ஏறக்குறைய 83 கோடி ரூபாய்) செலவாகும்.

இதே கணக்கில் 2023 ஏப்ரலில் எலான் மஸ்க் என்பவரின் 'ஸ்பேஸ்எக்ஸ்', 'ஆக்ஸியம் ஸ்பேஸ்' ஆகிய திட்டங்களில் சர்வதேச விண்வெளி நிலையம் செல்ல வாடிக்கையாளர் மூவருக்கு எட்டு நாள் பயணத்திற்காக ஐந்தரை கோடி டாலர் கட்டணம் வசூலிக்கப்பட்டதாம்.

சில விண்வெளி சுற்றுலா ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் ஒவ்வொரு சுற்றுலாப் பயணிக்கும் சந்திரனுக்குச் செல்வதற்கான செலவை அறிவித்துள்ளன. நிலவிற்கு அருகில் அதன் சுற்றுப்பாதையில் வட்டமடித்துத் திரும்புவதற்கு ஒரு இருக்கைக்கு 15 கோடி டாலர். இது பல மாத விண்வெளிப் பயிற்சியை உள்ளடக்கிய கட்டணம்.

இந்தியாவைப் பொறுத்தவரை, 2030-இல் தாழ்புவி சுற்றுப்பாதைக்குச் செல்ல ஒருடிக்கெட்டின் விலை சுமார் ரூ.6 கோடியாக இருக்கும்.

உலகளாவிய செயற்கைக்கோள் தகவல்தொடர்பு உள்ளமைவில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கோட்பாட்டின் வெளிப்பாடாக அமையும். தொலைநிலைக் கல்வி, தொலைநிலை மருத்துவம் போன்ற பல வற்றை மேற்கொள்ள முடியும்.

உலக விண்வெளி வாரம், அறிவியல்-தொழில்நுட்பம்-பொறியியல்-கணிதவியல் ஆகியவற்றுடன் வணிகமும் படிக்க உலகளாவிய மாணவர்களை ஊக்குவிக்கும். மேலும் விரிவடைந்து வரும் வணிக விண்வெளித் துறையின் வேலை வாய்ப்புகளையும் பெருக்கும்.

நம் நாட்டிலும் மாணவர்களால் தயாரிக்கப்பட்ட 'அனுசாட்', 'ஸ்டுட் சாட்', 'நூக் சாட்' 'ஜுக்னு', 'எஸ்.ஆர்.எம். சாட்', 'சத்யபாமா சாட்', 'ஸ்வயம்', 'ப்ரதம்', 'பைசாட்', 'என்.ஐ.யு.சாட்', 'கலாம் சாட்' போன்ற சிறு செயற்கைக்கோள்கள் இந்திய விண்வெளித்துறையின் ஒத்துழைப்புடன் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளன.

விண்வெளித் தொழில் முனைவோர்க்கான நிறுவனங்களை மூன்று விதமாகப் பார்க்கலாம். முதலாவது செயற்கைக்கோள்களையும், அவற்றைச் சுமந்துசெலுத்தும் ஏவுகலன்களையும் சொத்துகளாகக் கொண்ட நிறுவனம். இரண்டாவது, செயற்கைக்கோளைக் கண்காணித்து இயக்கும் நிபுணர்களைக் கொண்ட செயற்கைக்கோள் கட்டுப்பாட்டுப் புவிநிலையம் போன்ற நிறுவனம்.

இது விண்வெளி வர்த்தகத்தில் செலவிடும் வாடிக்கையாளர்களை நேரடியாகவும் கணிசமாகவும் சார்ந்து இருக்கும். மூன்றாவது, விண்வெளி சேவைகளின் தரவுகளை நேரடியாகச் சார்ந்திருக்கும் நிறுவனம். அதாவது செயற்கைக்கோள் அனுப்பும் எண்ணியல் தரவுகளை அலசி ஆராய்ந்து, பகுப்பாய்வு செய்து, பிம்பங்களாகவும், வரைபடங்களாகவும் வழங்கும்.

ஆயினும், உந்துகலன்களின் கரைபாகங்கள், எரிபொருள்கள், கணினி மென்பொருள்கள் போன்ற சிறப்புக் கூறுகளின் தரக் கட்டுப்பாடு, நம்பகத்தன்மை, பாதுகாப்பு போன்ற நடைமுறைகளில் அரசாங்கத்தின் மேற்பார்வை சில இடங்களில் தேவைப்படும்.

2021-ஆம் ஆண்டில் இந்திய விண்வெளித் துறையை தனியார் துறைகளும் ஸ்டார்ட் அப் நிறுவனங்களும் தொடங்கும் வகையில் 'இந்தியன் ஸ்பேஸ் அசோசியேஷன்' அறிமுகமானது. 'லார்சன் அண்ட் டூப்ரோ', 'நெல்கோ' (டாடா குழுமம்), 'ஒன்வெப்', 'வால்சந்த் நகர் இண்டஸ்ட்ரீஸ்' போன்ற தனியார் நிறுவனங்கள் இந்த அமைப்பின் உறுப்பினர்களாக உள்ளன.

அத்துடன், 'அக்னிகுல்' 'அனந்த் டெக்னாலஜிஸ்', ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட்', 'பெட்ரா பெட்ரா இன்னிக்ஸ்' (இந்தியா) லிமிடெட்', 'ஆஸ்ட்ரிக்ஸ் கார்ப்பரேஷன்', 'கோத்ரேஜ் ஏரோஸ்பேஸ்', 'திஜூஸ் பேஸ் இந்தியா லிமிடெட்' போன்ற பெரு நிறுவனங்களும், 'அக்னிகுல் காஸ்மோஸ்', 'பெல்லாட்ரிக்ஸ் ஏரோஸ்பேஸ்', 'துருவா ஸ்பேஸ்', 'ஸ்பேஸ் ஒவர் காப்', 'பிக்சல்', 'சாட்டிலைஸ்', 'ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ்', 'மனஸ்து ஸ்பேஸ்', 'ஸாஸ்ரா ஸ்பேஸ்' போன்ற தொடக்க நிறுவனங்களும் குறிப்பிடத்தக்கவை.

இந்தியாவைத் தவிர ஏனைய விண்வெளி நாடுகள், 'நாசா' எனப்படும் தேசிய ஏரோநாட்டிக்ஸ் அண்ட் ஸ்பேஸ் அட்மினிஸ்ட்ரேஷன், ஐரோப்பிய விண்வெளி முகமை, 'ஜப்பானிய விண்வெளி ஆய்வு முகமை', ரஷியக் கூட்டமைப்பின் மாநில நிறுவனமாக ரோஸ்கோஸ்மோஸ், சீனாவின் தேசிய விண்வெளி நிர்வாகம் எனப்பல்வேறு விண்வெளி முகமைகளையே இயக்கி வருகின்றன.

இந்தியாவும் 2023 ஜூலை 30 வரை, 34 நாடுகளின் மொத்தம் 431 அயல்நாட்டுச் செயற்கைக்கோள்களைச் செலுத்தி வருவாய் ஈட்டி வருகிறது. இந்தியாவின் விண்வெளித் தொழில்துறையில் 500-க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்களும், 45,000-க்கும் அதிகமான பணியாளர்களும் உள்ளனர்.

2019-ஆம் ஆண்டில், இந்தியாவின் விண்வெளித் துறை 700 கோடி டாலர் (உலகளாவிய விண்வெளித் துறையில் 2% ) அளவு வர்த்தகத்தில் ஈடுபட்டது. 2024-ஆம் ஆண்டுக்குள் வர்த்தகம் 5,000 கோடியாகும் என்று எதிர்பார்க்கிறது.

மார்க் வில்லியம்ஸன் என்கிற விண்வெளி பொருளாதார நிபுணர், 'ஸ்பேஸ் அண்ட் கம்யூனிகேஷன்' என்ற அறிவியல் இதழில் 'அடுத்த ஐந்தாண்டுகளில் தற்போதைய விண்வெளி வணிக நாடுகளுடன் வர்த்தக ரீதியில் போட்டியிடும் அளவுக்கு இந்தியா முன்னேறி விடும் என்பது உண்மை.

இல்லையென்றாலும் மேலை நாட்டு விண்வெளி உற்பத்தியாளர்கள் அவட்சியப்படுத்துகிற அல்லது விலை அதிகப்படுத்திவிட்ட செயற்கைக்கோள் நுட்பங்கள் பலவற்றையும் மூன்றாம் உலக நாடுகளுக்கு அவ்வது வளர்ந்து வரும் நாடுகளுக்கு இந்தியா விற்பனை செய்ய முடியும் என்று எதிர்பார்க்கலாம்' என (செப்டம்பர்-அக்டோபர் 1996) கணித்துரைத்தார் (செப். அக். 1996). அவரது அன்றைய கணிப்பு இன்று ஈடேறி வருகிறது எனலாம்.

அக். 4 – 10 உலக விண்வெளி வாரம்.

கட்டுரையாளர்:
இஸ்ரோ விஞ்ஞானி (ஓய்வு)

# வாச்சாத்தி எழுப்பும் கேள்வி!

இந்திய நீதித்துறை வரலாற்றில், வாச்சாத்தி வன்கொடுமை வழக்குத் தீர்ப்பு ஒரு மைல்கல் என்று கூறுவதைவிட, இனி வரும் காலங்களுக்கான கலங்கரை விளக்கம் என்றுதான் கூற வேண்டும். சுமார் முப்பதாண்டு கால போராட்டத்தின் முடிவில், குற்றவாளிகளின் தண்டனை உறுதிசெய்யப்பட்டிருக்கிறது.

அரசு இயந்திரத்தின் ஒட்டுமொத்த சக்தியை, சாமானிய ஆதிவாசி மக்கள் எதிர்த்துப் போராடி வெற்றியடைந்திருப்பது, சுதந்திர இந்தியாவில் நீதிபரிபாலன சுதந்திரத்திற்குக் கிடைத்திருக்கும் வெற்றி. 655 ஆதிவாசி பழங்குடியினர் தொடர்ந்து போராடி, தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் பெற்றிருக்கிறார்கள்.

கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் சித்தேரி மலையடிவாரத்தில் இருக்கிறது தமிழகத்தின் தருமபுரி மாவட்டம் வாச்சாத்தி கிராமம். அங்கே பல தலைமுறைகளாக வாழ்ந்து வரும் நூற்றுக் கணக்கான ஆதிவாசி மக்களின் வாழ்க்கையையே புரட்டிப் போட்டது 1992–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20–ஆம் தேதி நடைபெற்ற நிகழ்வு. காவல்துறை, வனத்துறை, வருவாய்த்துறை ஆகியவற்றைச் சேர்ந்த 269 அதிகாரிகள் அந்த கிராமத்தை முற்றுகையிட்டுத் தாக்கியபோது, அந்த அப்பாவி மக்கள் அதிர்ந்தனர்.

அவர்கள் தாக்கப்பட்டனர்; வீடுகள் சூறையாடப்பட்டன. ஒரு கர்ப்பிணிப் பெண் உள்பட 18 பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானார்கள். 90 பெண்கள், 28 குழந்தைகள், 15 ஆண்கள் கைது செய்யப்பட்டு, சட்டவிரோதமாக வனத்துறை அலுவலகத்தில் அடைத்து வைக்கப்பட்டனர்.

கடத்தப்பட்ட சந்தன மரங்களை அந்த கிராமத்தில் பாதுகாக்கிறார்கள் என்பதுதான் அவர்கள் மீதான குற்றச்சாட்டு. அங்கிருந்து சந்தன மரங்கள் மீட்கப்பட்டதாகத் தெரியவில்லை.

வாச்சாத்தி கிராமத்தைச் சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டு சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். தொடர்ந்து நடந்த தாக்குதலால் அந்த கிராமத்தில் இருந்த அனைவரும் அங்கிருந்து வெளியேறிவிட்டனர். வாச்சாத்தி கிராமத்திலிருந்து அந்த ஆதிவாசிகள் அடித்து விரட்டப்பட்டது ஏன் என்கிற கேள்விக்கு இன்றுவரை விடை கிடைத்தபாடில்லை.

வாச்சாத்தி பழங்குடியின மக்கள் சார்பில் மாவட்ட ஆட்சியர், வருவாய்த்துறை அதிகாரி, காவல்துறை கண்காணிப்பாளர், தலைமை வனத்துறை அதிகாரி ஆகியோரிடம் வழங்கப்பட்ட மனுக்களின் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பட்டியலின மக்கள்– பழங்குடியின தேசிய ஆணையமும் முதல் தகவல் அறிக்கைகூடப் பதிவு செய்யவில்லை.

மார்க்சிஸ்ட் கட்சியின் அன்றைய தமிழ்நாடு மாநிலச் செயலாளர் ஏ.நல்லசிவன், உயர்நீதிமன்றத்தில் சிபிஐ விசாரணை கோரி பொது நல வழக்குத் தொடுத்தார். அதற்குப் பிறகுதான், வாச்சாத்தி விவகாரம் கவனம் பெறத் தொடங்கியது. உயர்நீதிமன்றம், சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட்டது.

தருமபுரி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில், சிபிஐ குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து விசாரணை நடந்தது. அந்த வழக்கின் விசாரணையை எப்படியெல்லாம் தாமதிக்கவும், தடுத்து நிறுத்தவும் முடியுமோ, அவற்றையெல்லாம் அதற்குப் பிறகு ஆட்சியில் இருந்த கட்சிகள் செய்தன. பாதிக்கப்பட்டவர்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டிய அரசு, அதிகாரிகளைப் பாதுகாப்பதற்குக் களமிறங்கியது.

2011 செப்டம்பர் 29–ஆம் தேதி, சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகு மாவட்ட அமர்வு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. குற்றப்பத்திரிகையில் இடம்பெற்றிருந்த 269 பேரில், உயிருடன் இருக்கும் 215 பேரைக் குற்றவாளிகள் என்று நீதிமன்றம் அறிவித்து, அவர்களுக்கு சிறைத்தண்டனை விதித்தது. ஆனால், சென்னை உயர்நீதிமன்றத்தில் செய்யப்பட்ட மேல்முறையீட்டைத் தொடர்ந்து, தண்டிக்கப்பட்ட அனைவருக்கும் பிணை வழங்கப்பட்டது.

இப்போது, 12 ஆண்டுகளுக்குப் பிறகு, மேல் முறையீட்டு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டு குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட அனைத்துத் தண்டனைகளையும் உறுதி செய்திருக்கிறார் உயர்நீதிமன்ற நீதிபதி பி. வேல்முருகன். அதுமட்டுமல்லாமல், பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான பெண்களுக்கு ரூ. 10 லட்சம் இழப்பீடும், வாச்சாத்தி நிகழ்வால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிசெய்ய வேலைவாய்ப்புக்கும் உத்தரவிட்டிருக்கிறார்.

வாச்சாத்தி சம்பவத்தில் மூத்த அதிகாரிகளுக்கு நேரடியான தொடர்பு இல்லாமல் இருந்தாலும், அவர்களது உத்தரவோ, அனுமதியோ இல்லாமல் இப்படியொரு தாக்குதல் நடந்திருக்க வாய்ப்பு இல்லை. சம்பவத்தின்போது, பதவியில் இருந்த தருமபுரி மாவட்ட ஆட்சியர், காவல்துறை கண்காணிப்பாளர், மாவட்ட வனத்துறை அதிகாரி ஆகியோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க நீதிபதி வேல்முருகன் உத்தரவிட்டிருப்பது பாராட்டுக்குரியது.

அவர்கள் மட்டுமல்லாமல், மாநில அளவில் தலைமைப் பதவி வகித்தவர்களும் பொறுப்பேற்க வேண்டும் என்பதுதான் நியாயம். அவர்கள் மட்டுமல்ல, அரசியல் தலைமையும்...

சட்டம் – ஒழுங்கை நிலைநாட்டும் அதிகாரிகள் ஐ.நா. சபையின் வழிகாட்டு அடிப்படை நியதி 24–இன்படி, தங்களுக்குக் கீழே பணியாற்றும் அதிகாரிகளின் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பேற்க வேண்டியது அவசியம். அப்படிப்பட்ட நிகழ்வுகளில் அதைத் தடுக்கவோ, தவறுகள் குறித்து விசாரணை நடத்தித் தண்டிக்கவோ செய்யாவிட்டால், அதற்கு அவர்களும் பொறுப்பாளிகள் என்கிறது அந்த சர்வதேச நியதி. வாச்சாத்தி நிகழ்வுக்கும் அது பொருந்தும்.

முப்பது ஆண்டு கால தாமதத்திற்குப் பிறகு நீதி நிலைநாட்டப்பட்டிருக்கிறது. வாச்சாத்தி ஆதிவாசி மக்களுக்கு நியாயம் கிடைத்திருக்கிறது என்பது மகிழ்ச்சி அளிக்கிறது. அதே நேரத்தில், 'வாச்சாத்தி' தாக்குதல் ஏன் நடைபெற்றது, யாருடைய நன்மைக்காக அதிகாரிகள் களமிறக்கப்பட்டனர் என்கிற புதிருக்கும் விடை கிடைத்தாக வேண்டும்!

# சிக்கிம் வெள்ளத்தில் உயிரிழப்பு 25-ஆக உயர்வு

**கேங்டாக்/ஜல்பைகுரி, அக். 6:** சிக்கிமில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 25-ஆக உயர்ந்துள்ளது. இதில் 7 பேர் ராணுவ வீரர்களாவர்.

மேலும், 15 ராணுவ வீரர்கள் உள்பட 143 பேரை தேடும் பணி மூன்றாவது நாளாக வெள்ளிக்கிழமையும் தொடர்ந்தது.

வடக்கு சிக்கிமில் உள்ள லோனாக் ஏரிப் பகுதியில் கடந்த புதன்கிழமை அதிகாலை மேக வெடிப்பால் அதீத கனமழை பெய்தது. இதையடுத்து, தீஸ்தா ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, சுங்தாங் பகுதியில் உள்ள நீர்மின் திட்ட அணை உடைந்தது. இதனால், மங்கன், கேங்டாக், நாம்சி, பாக்யாங் ஆகிய 4 மாவட்டங்கள் வெள்ளக்காடாக மாறின.

**ராணுவ வீரர்கள் மாயம்:** பர்டாங் பகுதியில் வெள்ளத்தில் சிக்கி 23 ராணுவ வீரர்கள் காணாமல்போயினர். அவர்களில் ஒருவர் மட்டும் உயிருடன் மீட்கப்பட்டார்.

வெள்ளிக்கிழமை நிலவரப்படி, 7 ராணுவ வீரர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மற்றவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாக, முதல்வர் பிரேம் சிங் தமாங் தெரிவித்தார். உயிரிழந்த 7 ராணுவ வீரர்களில் 4 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுடன் சேர்த்து, இதுவரை 25 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

தீஸ்தா ஆற்றின் படுகைகளிலும், மேற்கு வங்கத்தின் ஜல்பைகுரி, கூச்பிகார், டார்ஜீலிங் ஆகிய மாவட்டங்களில் பாயும் கிளையாறுகளில் இருந்தும் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் இருந்து இதுவரை 2,413 பேர் மீட்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட 4 மாவட்டங்களில் 7,644 பேர் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

**முதல்வர் நேரில் ஆய்வு:** பாக்யாங் மாவட்டத்தின் ராங்போ நகரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதல்வர் தமாங் வெள்ளிக்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது அவர் கூறுகையில், 'வடக்கு சிக்கிமில் தகவல்தொடர்பு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பாலங்கள் அடித்துச் செல்லப்பட்டதால், மாவட்டங்களுக்கு இடையே போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. 4 மாவட்டங்களிலும் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்பில் பொருள்சேதம் ஏற்பட்டுள்ளது. இப்போது மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கே முன்னுரிமை அளித்து வருகிறோம். குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்ளிட்டோருடன் பேசியுள்ளேன். மாநிலத்துக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்வதாக, அவர்கள் உறுதியளித்துள்ளனர்' என்றார்.

**ரூ.4 லட்சம் நிவாரண நிதி:** உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா ரூ.4 லட்சமும், நிவாரண முகாம்களில் உள்ளவர்களுக்கு தலா ரூ.2 ஆயிரமும் உடனடியாக வழங்கப்படும் என்று முதல்வர் தமாங் அறிவித்துள்ளார்.

சிக்கிமின் லாசென், லாசுங், சுங்தாங் ஆகிய பகுதிகளில் சுமார் 3,000 சுற்றுலாப் பயணிகள் சிக்கித் தவித்து வருகின்றனர். அவர்களை மீட்கும் பணியை ராணுவம் தொடங்கவிருப்பதாக மாநில தலைமைச் செயலாளர் வி.பி.பாதக் தெரிவித்தார்.

**இதுவரை 7 ராணுவ வீரர்களின் சடலம் மீட்பு**



சிக்கிமில் ஏற்பட்ட திடீர் மழை வெள்ளத்தை தொடர்ந்து சகதியில் சிக்கிய வாகனம்.

## முதல்கட்டமாக ரூ.44 கோடி: உள்துறை அமைச்சர் ஒப்புதல்

**புது தில்லி, அக். 6:** சிக்கிமில் நிவாரணப் பணிகளுக்காக, மாநில பேரிடர் நிவாரண நிதிக்கு மத்திய அரசின் பங்களிப்பின்கீழ் முதல்கட்டமாக ரூ.44.8 கோடியை விடுவிக்க மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வெள்ளிக்கிழமை ஒப்புதல் வழங்கினார்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்ட அதிகாரபூர்வ அறிக்கையில், 'உள்துறை அமைச்சரின் உத்தரவின்படி, சிக்கிமில் வெள்ள சேதங்களை மதிப்பிட பல்வேறு அமைச்சகங்களை உள்ளடக்கிய மத்தியக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு விரைவில் சிக்கிம் பயணிக்கும். குழுவின் ஆய்வைத் தொடர்ந்து கூடுதல் நிதி விடுவிக்கப்படும்.

தற்போதைய சூழலை எதிர்கொள்ளத் தேவையான அனைத்து உதவிகளையும் சிக்கிமுக்கு மத்திய அரசு வழங்கி வருகிறது. தேடுதல்-மீட்பு நடவடிக்கையில் தேசியப் பேரிடர் மீட்புப் படை, விமானப் படை மற்றும் ராணுவ குழுக்கள் பணியமர்த்தப்பட்டுள்ளன' என்று கூறப்பட்டுள்ளது.

# வட்டி விகிதத்தில் மாற்றமில்லை: ஆர்பிஐ

**மும்பை, அக். 6:** வங்கிகளுக்கான குறுகிய காலக் கடன்கள் மீதான வட்டி விகிதத்தில் (ரெப்போ ரேட்) எவ்வித மாற்றத்தையும் இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) மேற்கொள்ளவில்லை. தொடர்ந்து நான்காவது முறையாக வட்டி விகிதம் மாற்றமில்லாமல் 6.50 சதவீதமாக தொடர்கிறது.

முன்னதாக, கடந்த பிப்ரவரியில் நடைபெற்ற நிதிக் கொள்கைக் குழு கூட்டத்தில் வட்டி விகிதத்தை 0.25 சதவீதம் உயர்த்தி 6.50 சதவீதமாக ஆர்பிஐ நிர்ணயித்தது. அதன்பிறகு நான்குமுறை நடைபெற்ற நிதிக் கொள்கைக் குழு கூட்டங்களிலும் வட்டி விகிதத்தை அதே நிலையில் தொடர்வது என்ற முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் வீட்டுக் கடன், வாகனக் கடன் உள்ளிட்ட கடன்கள் மீதான வட்டி உயர வாய்ப்பில்லை. அதே நேரத்தில் வங்கிகளில் நிரந்தர வைப்புக்கு வழங்கப்படும் வட்டியும் அதிகரிக்கப்படாது.

மும்பையில் வெள்ளிக்கிழமை நிறைவடைந்த நிதிக் கொள்கைக் குழு கூட்டத்துக்குப் பிறகு ஆர்பிஐ ஆளுநர் சக்திகாந்த தாஸ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சர்வதேச அளவில் பொருளாதாரச் செயல்பாடுகள் சுணக்கமடைந்தாலும், அதை மீறி இந்திய பொருளாதாரம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. நமது அடிப்படைப் பொருளாதாரக் கட்டமைப்பு வலுவாக இருப்பதே இதற்கு முக்கியக் காரணம். சில உணவுப் பொருள்களின் விலை திடீரென உயர்ந்ததால் குறைந்து வந்த பணவீக்கம் திடீரென அதிகரித்தது.

சர்வதேச எண்ணெய், எரிவாயு சந்தையில் ஏற்படும் ஏற்ற இறக்கம், பிராந்திய அளவிலான பதற்றம், சாதகமற்ற பருவகாலம் குறித்த அச்சம், சில உணவுப் பொருள்களின் விலை திடீரென அதிகரிப்பது ஆகியவை பணவீக்கத்தில் எதிரொலிக்கிறது.

2023-24 நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 6.5 சதவீதமாக இருக்கும். பணவீக்கத்தை 4 சதவீதத்தில் வைத்திருப்பதே நமது இலக்கு. எனினும், பணவீக்கம் 5.4 சதவீதமாக தொடர வாய்ப்புள்ளது. காய்கறி விலை சற்று குறைந்தது, சமையல் எரிவாயு சிலிண்டர் விலை குறைப்பு உள்ளிட்டவற்றால் பணவீக்கம் குறைய வாய்ப்புள்ளது. பணவீக்கம் தொடர்ந்து அதிகரிப்பது நாட்டின் அடிப்படை பொருளாதார நிலைத்தன்மையைப் பாதிக்க வாய்ப்புள்ளது.

சர்வதேச அளவில் இப்போது இந்தியாதான் உலகின் வளர்ச்சிக்கான ஊக்குவிப்பு மையமாக உள்ளது.

**ரூ.4 லட்சம் வரை நகைக் கடன்:** நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளில் நகைக் கடன் உச்சவரம்பு ரூ.4 லட்சமாக உயர்த்தப்படுகிறது. இதுவரை அதிகபட்சமாக ரூ.2 லட்சம் வரையே நகைக் கடன் வழங்கப்பட்டு வந்தது. அசல் மற்றும் வட்டியை ஒரே தவணையில் திருப்பிச் செலுத்தும் முறையில் மட்டுமே ரூ.4 லட்சம் கடன் வழங்கப்படும்.

**மத்திய அரசு நிதிநிலை:** மத்திய அரசின் நிதிநிலையில் எந்த பிரச்னையும் இல்லை. அதுபற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. நிதிப் பற்றாக்குறையைக் குறைக்கும் இலக்கில் உறுதியாக செயல்படுவதாக மத்திய அரசு உறுதியளித்துள்ளது. கரோனா காலகட்டத்தில் அரசு அதிகம் செலவிட வேண்டியது இருந்ததால், நிதிசார்ந்த சில கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்க முடியாமல் போனது. ஆனால், இப்போது மீண்டும் நிதி ஒழுங்குக் கட்டமைப்புக்குள் அரசு வந்துவிட்டது.

**வங்கிகளுக்கு அறிவுரை:** வங்கிகளும், நிதி நிறுவனங்களும் பிணையற்ற கடன்களை வழங்குவதில் கூடுதல் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். ஏனெனில், இதுபோன்ற கடன்களால் வங்கிகளின் நிதிநிலை பாதிக்கப்படக் கூடும். தங்கள் நிதிநிலையை சாதகமாக பாரமரிப்பதில் வங்கிகள் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

தனிநபர் கடன், கடன் அட்டை, பிணையில்லாத சிறு கடன் ஆகியவை சமீபகாலமாக வேகமாக அதிகரித்து வருவதைச் சுட்டிக்காட்டி ஆர்பிஐ இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

மத்திய அரசு புதிதாக அறிவித்துள்ள விஸ்வகர்மா திட்டமானது எண்ம உள்கட்டமைப்பு நிதி திட்டத்தில் இணைக்கப்பட இருக்கிறது. இதன்மூலம் இத்திட்டத்தில் கடன் பெறுவோர் தங்கள் வர்த்தகத்தில் எண்ம முறை பணப் பரிமாற்றத்தை மேற்கொள்வதற்கான வசதி ஏற்படுத்தித் தரப்படும். மேலும், இந்த எண்ம உள்கட்டமைப்பு நிதி திட்டம் 2025-ஆம் ஆண்டு இறுதி வரை நீட்டிக்கப்படுகிறது. இத்திட்டம் 2023 இறுதியில் நிறைவடைய இருந்தது.



ஆர்பிஐ ஆளுநர் சக்திகாந்த தாஸ்.




| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 187 | 104 | 63 | 354 |
| ஜப்பான் | 47 | 57 | 65 | 169 |
| தென் கொரியா | 36 | 49 | 84 | 169 |
| இந்தியா | 22 | 34 | 39 | 95 |
| உஸ்பெகிஸ்தான் | 20 | 18 | 26 | 64 |
| சீன தைபே | 17 | 16 | 25 | 58 |
| வட கொரியா | 11 | 18 | 10 | 39 |
| தாய்லாந்து | 10 | 14 | 30 | 54 |
| பஹ்ரைன் | 10 | 3 | 5 | 18 |
| கஜகஸ்தான் | 9 | 18 | 41 | 68 |